# முதல்வர் மு.க.ஸ்டாலினின் சீரிய நடவடிக்கை!

5- ஆம் பக்கத் தொடர்ச்சி



பழங்குடியினருக்கான வாழ்வாதார திட்டத்தின் கீழ், வேளாண் பொறியியல் இயந்திரங்கள், சூரியமின் சக்தியுடன் இயங்கும் அரவை இயந்திரங்கள் வழங்குதல்

கூட்டுறவு சங்கங்கள் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்திடவும், 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்குத் தீவனப்புல் வளர்க்கவும் விதைத் தொகுப்பு மற்றும் புல்கறணைகள் ரூ100 கோடி செலவில். வழங்கப்பட்டுள்ளன.

13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டுக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ. 196 கோடி மதிப்பீட்டில் சுகாதார அங்காடிகள் அமைக்கப்படுவதற்கு ரூ. 98 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொள்ள தாட்கோ வழங்கும் ரூ.2.50 இலட்சம் மானியத் தொகை ரூ.6.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசிக்கும் வீடற்ற 443 இருளர் பழங்குடியின குடும்பங்களுக்கு ரூ.19.38 கோடி செலவில் வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் ஆண்டுதோறும் ரூ.100 கோடி மதிப்பீட்டில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

17 மாவட்டங்களில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் 20 சமுதாயக் கூடங்கள் ரூ.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்படுகின்றன. .

அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய இருளர் பழங்குடியினர்களுக்கு (Particularly Vulnerable Tribal Groups) 1094 புதிய வீடுகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தர அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.


ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கிடையே ஆந்திரா மாநிலத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டின் சார்பில், பங்கேற்ற மாணவர்களுடன் கலந்துரையாடல்.

1000 தூய்மைப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் கட்டும் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய வீடுகள் வாங்க மானியம் வழங்கப்பட்டுள்ளது.

சாதி வேறுபாட்டைக் களைய சமத்துவச் சுடு காட்டுடன் சமூக நல்லிணக்கம் வளர்த்து வாழும் 37 மாவட்டங்களில் உள்ள 37 கிராமங்களுக்கு ரூபாய் 10 இலட்சம் நிதி வழங்கப்பட்டு, அக்கிராமங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றது முதல் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகின்றது.

2023 - 2024 ஆம் நிதியாண்டில் மாநில அரசு நிதியுதவியுடன் 12 நபர்களை கொண்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு குழுவிற்கு ரூ.2.50,000/- வீதம் 229 குழுக்களுக்கு ரூ.5.72 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

தூய்மைப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக தேசிய துப்புரவுப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின்மூலம் 587 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தார்களுக்கு ரூ.1.09 கோடி கால முறை கடன் வழங்கப்பட்டுள்ளது.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆதிதிராவிட சமுதாய மக்களின் முன்னேற்றத்தில் தனிக்கவனம் செலுத்தி வருவதன் காரணமாக வாழ்க்கைத்தரம் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வருகிறது. அரசின் சீரிய முயற்சி காரணமாக ஆதிதிராவிட இளைஞர்கள் கல்வியிலும் தொழிலிலும் முன்னேற்றம் அடைந்து சமத்துவ சமுதாயத்தின் பிரதிநிதிகளாக உருவாகி வருகிறார்கள். இந்தியாவின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களிலும், வெளிநாடுகளிலுள்ள சிறந்த கல்வி நிறுவனங்களிலும் உயர்கல்வி படிப்பினையும், முனைவர் படிப்பினை மேற்கொண்டு வருகின்றனர்.**


ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் ரூ.13கோடி மதிப்பில் கட்டப்படும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான புதிய கட்டிடத்திற்கான பணிகளை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்துகொண்டு துவக்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சியர் மொ.ந.பூங்கொடி, திண்டுக்கல் எம்.பி. ஆர்.சச்சிதானந்தம், ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி, ஊராட்சிமன்ற தலைவர் சுந்தாரி அன்பரசு, ரெக்ஸ், ஊராட்சிமன்ற துணைத்தலைவர் எம்.வி.ரெங்கசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

### சிவகங்கை மாவட்டத்தில் - இளைஞர் அணி சார்பாக

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு பேச்சுப் போட்டி!

### மாவட்ட அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் அறிக்கை!

சிவகங்கை. ஜூலை 14.

சிவகங்கை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது. கழகத் தலைவர், தமிழக முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆணையின் பேரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு என் உயிரினும் மேலான என்ற தலைப்பில் கலைஞர் குறித்த பேச்சுப்போட்டி கல்லூரி மாணவ - மாணவிகளுக்கு நடைபெற உள்ளது.

சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்பெரியகருப்பன் ஆலோசனை யின் பேரில் மாநில அளவில் நடைபெறும் கல்லூரி மாணவ- மாணவியருக்கான கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு என் உயிரினும் மேலான என்ற தலைப்பில் தலைவர் கலைஞரைப் பற்றி நடைபெற உள்ள இந்த பேச்சுப் போட்டியில் சிவகங்கை மாவட்டத்திலிருந்து கல்லூரி மாணவர்கள் பங்கேற்கலாம். இந்த பேச்சு போட்டியில் அந்தந்த கல்லூரி மாணவ - மாணவிகள் கலந்து கொள்ளலாம். இதற்கான தகவல் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரிமுதல்வரிடம் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுதிய கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இந்த பேச்சு போட்டியில் பங்கேற்க விரும்பும் கல்லூரி மாணவர்கள் , மாணவிகள் மற்றும் திருநர்கள் அதற்குரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து வருகிற 25.7.24 தேதிக்குள் அன்பகம் 614. அண்ணா சாலை தேனாம்பேட்டை சென்னை 600018 என்ற முகவரிக்கு அனுப்பிட வேண்டும். 18 வயதிலிருந்து 35 வயதிற்குள் உள்ள ஆண்கள், பெண்கள், திருநர்கள் இந்த போட்டியில்முன்பதிவு செய்துகொள்ளவேண்டும். இத்தகைய விண்ணப்பங்களை வருகிற ஜூலை 25 .7 .2024. அண்ணா சாலை ,தேனாம்பேட்டை, சென்னை. 600018. அத்துடன்www. kalaignar 100 pechu org..... என்ற இணைய தளத்தின் வாயிலாக விண்ணப்பிக் கலாம்.

விண்ணப்பித்தவர்களுக்கு முறையாக பேச்சுப்போட்டியில் பங்கேற்பது குறித்த தகவல்கள் போட்டி நடைபெறும் தேதி ,நாள், இடம் ஆகியவை தெரிவிக்கப்படும். இந்த பேச்சுப் போட்டியில் சிறந்த பேச்சாளர்கள் 3 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு மாநில அளவில் நடைபெறும் பேச்சு போட்டியில் பங்கேற்பார்கள். பேச்சு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசாக ரூபாய் ஒரு லட்சமும், இரண்டாவது பரிசாக ரூபாய் 75 ஆயிரம், மூன்றாவது பரிசாக ரூபாய் 50000, வழங்கப்பட உள்ளது. இதற்கான விண்ணப்பத்தினை க்யூ ஆர் கோடு ஸ்கேன் மூலமும் அனுப்பி வைக்கலாம்.

இது குறித்து மேலும் தகவல் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளராகிய எனது செல் 94434 42264 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த போட்டியில் பங்கேற்க விரும்புகிறவர்கள் வருகிற 25ஆம் தேதிக்குள் உரிய விண்ணப்பனை பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.


சுதந்திரப் போராட்ட மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் 267வது குருபூஜையை முன்னிட்டு பாளை தெற்கு பஜாரில் உள்ள சுதந்திரப் போராட்ட மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் மாநகராட்சி மேயர் (பொறுப்பு) ராஜு,மண்டல தலைவர் பிரான்சிஸ், வழக்கறிஞர் தினேஷ்,ஒன்றிய செயலாளர் அன்பழகன்,மாநகர துணை செயலாளர் மூளிகுளம் பிரபு,பகுதி செயலாளர் துபாய் சாகுல்,மாமன்ற உறுப்பினர்கள் கிட்டு என்ற கிருஷ்ணன், உலகநாதன்,டாக்டர் சங்கர், அலி சேக்மன்சூர், பேச்சியம்மாள், வட்டக் கழக செயலாளர்கள் பேபி கோபால், மேகை செல்வம், ராஜா, அந்தோணி, மாரிமுத்து, டாஸ்மாக் தொ.மு.ச.அரசன் ராஜ், சுசி மணி, பொறியாளர் அணி சாய்பாபா, தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி, மாநகரப் பிரதிநிதி சுண்ணாம்பு மணி, இளைஞரணி தச்சை துர்காராம், ஜெய மகேஷ், வட்ட கழக பிரதிநிதிகள் குணா, மகேஷ், நெல்லையப்பன், மாயகிருஷ்ணன், குற்றாலிங்கம், திருவடி, நிர்வாகிகள் வாசுகி செல்லத்துரை, ஹரி, தென்றல் சேகர், பேபி குமார், கண்ணன், பழக்கண்ணன்கோபால், பாலன் என்ற ராஜா உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில்

## ‘மக்களுடன் முதல்வர்’ - ஊரகம் - சிறப்பு திட்ட முகாம்!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!

கடலூர், ஜூலை 14-

கடலூர் மாவட்டம், பரங்கிபேட்டை ஊராட்சி ஒன்றியம், பு.முட்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ”மக்களுடன் முதல்வர்-ஊரகம்” என்ற சிறப்புத் திட்ட முகாம், 12.7.2024, வெள்ளிக்கிழமை, அன்று காலை 10 மணியளவில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ.அருண் தம்புராஜ் முன்னிலையில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, 309 பயனாளிகளுக்கு ரூ.5,08,31,148/- மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொருப்பேற்றது முதல் பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். அவ்வகையில் மகளிருக்கான விடியல் பயணம், புதுமை பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், நான் முதல்வன் திட்டம், உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டம், முதல்வரின் முகவரி, களஆய்வில் முதலமைச்சர் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் அரசு அலுவலகங்களை நாடி மக்கள் செல்லும் நிலையை மாற்றி மக்களை தேடி அரசு அலுவலர்கள் சென்று மக்களின் குறைகளை போக்கும் வண்ணம் இந்த அரசு செயல்படுகிறது.

கடலூர் மாவட்டத்தில் கடலூர், அண்ணாகிராமம், பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, மேல்புவனகிரி, குமராட்சி, கீரப்பாளையம், பரங்கிப்பேட்டை, காட்டுமன்னார்கோயில், ஸ்ரீமுஷ்ணம், கம்மாபுரம், விருத்தாசலம் மங்களூர், நல்லூர் ஆகிய 14 ஊராட்சிகளில் உள்ள 683 கிராமப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ”மக்களுடன் முதல்வர் -ஊரகம்” சிறப்புத் திட்டத்தின்கீழ் 11.07.2024 முதல் 13.09.2024 வரை மொத்தம் 91 முகாம்கள் நடைபெற உள்ளது.

இன்று நடைபெறும் மக்களுடன் முதல்வர்-ஊரகம் முகாமில் பரங்கிபேட்டை ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த பு.முட்லூர், மஞ்சக்குழி, பு.ஆதிவராக நல்லூர், கீழமணக்குடி, தச்சக்காடு ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கு நடைபெறுகிறது. இப்பகுதி பொதுமக்கள் இந்த முகாமில் பெருந்திரலாக பங்கேற்று துறை சார்ந்த தங்களின் கோரிக்கைகளை மனுவாக அளித்து உரிய தீர்வு களை பெற வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பொதுமக்களுக்கு அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை எளிமைப்படுத்தும் வகையில் நகரப் பகுதிகளில் கொண்டுவரப் பட்ட மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தற்போது அனைத்து ஊரகப் பகுதிகளிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இம்முகாம்களில் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, கூட்டுறவுத் துறை, வீட்டுவசதி வாரியம், வேளாண்மைத்துறை, தொழிலாளர் நலத்துறை, சமூக நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மின்சாரம் (ம) பகிர்மானத்துறை, காவல்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, தாட்கோ, மகளிர் திட்டம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, மாவட்ட தொழில் மையம், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, மீன்வளத்துறை, இ-சேவை மையம் உள்ளிட்டவற்றை சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர். பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் நடைபெறும் முகாம்க ளுக்கு சென்று கோரிக்கை மனுக்களை உரிய ஆவணங்களுடன் அளித்து பயன்பெறலாம் என தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் வருவாய்த் துறை சார்பில் 130 பயனாளிகளுக்கு ரூ. 55,11,069/- மதிப்பீட்டில் இலவச மனைப் பட்டா, பட்டா மாற்றம், புதிய குடும்ப அட்டை, சமூக பாதுகாப்பு அட்டை போன்ற உதவிகளும், ஊரக வளர்ச்சித் துறை சார்பில் 104 பயனாளிகளுக்கு ரூ. 3,68,05,600/- மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் பணியாணையும், வேளாண் துறை சார்பில் 11 பயனாளிகளுக்கு ரூ.6,500/- மதிப்பீட்டில் தார்பாரலின், நெல் நுண்ணூட்டம் சார்ந்த உதவிகளும், தோட்டக்கலை துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.56,910/- மதிப்பீட்டில் மரக்கன்றுககளும், வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.21,32,087/- மதிப்பீட்டில் பவர் டில்லர் மற்றும் உழுவை கருவிகளும், தாட்கோ சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ. 12,50,792/- மதிப்பீட்டில் CM ARISE நலத்திட்ட உதவிகளும், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் துறை சார்பில் 11 கர்ப்பிணி பெண்களுக்கு தாய்சேய் நல பெட்டகங்களும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.5,00,000/- மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளும், ஆதிதிராவிடர் நலத் துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.28,190/- மதிப்பீட்டில் விலை யில்லா தையல் இயந்திரங்களும், மகளிர் திட்டம் சார்பில் 16 பயனாளிகளுக்கு ரூ.45,40,000/- மதிப்பீட்டில் சுய உதவிக் குழுக்களுக்கான நலத் திட்ட உதவிகள் என மொத்தம் 309 பயனாளிகளுக்கு ரூ.5,08,31,148/- மதிப்பீட்டிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டன.

இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜ சேகரன், சார் ஆட்சியர், சிதம்பரம் செல்வி ரஷ்மி ராணி, உதவி இயக்குநர், ஊராட்சிகள் திருமதி ஷபானா அஞ்சும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் தலைமையில் பாளை மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. முன்னிலையில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் பாளை தொகுதிக்கு உள்பட்ட மேலப்பாளையம், கருங்குளம்,மூளிகுளம்,ராஜா குடியிருப்பு,பாளை மார்க்கெட், கக்கன் நகர் ஆகிய பகுதிகளில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். நிகழ்வில் மேயர் (பொறுப்பு)ராஜு, வழக்கறிஞர் தினேஷ், மாநகர துணைச் செயலாளர் மூளிகுளம் பிரபு, மேலப்பாளையம் பகுதிச் செயலாளர் துபாய் சாகுல், மண்டலத் தலைவர்கள் பிரான்சிஸ், ரேவதி பிரபு, கதீஜா இக்லாம் பாசிலா, மாமன்ற உறுப்பினர் சுப்புலட்சுமி குணா, வட்டச் செயலாளர் பாபு குமார், குறிச்சி ஆனந்த், குணா உள்பட கழகத்தினர், காங்கிரஸ் கட்சியினர் திரளாக கலந்து கொண்டனர்.


சுதந்திரப் போராட்ட மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் 267 வது குருபூஜையை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் அலங்கரிக்கப்பட்டு வைத்திருந்த சுதந்திரப் போராட்ட மாவீரன் அழகுமுத்துக் கோன் அவர்களின் திருஉருவப் படத்திற்கு தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் அழகுசுந்தரம், அன்பழகன், அப்பாஸ், மூப்பன் ஹபீபுர் ரகுமான்,சுடலை, ராஜராஜன், வெள்ளத்துரை, ரமேஷ் வளநரசு, முத்துராமலிங்கம், மல்லிகா சரவணன், ராமராஜ், கரிசல் வேல்சாமி, செல்வம், கஜேந்திரன், மங்களவிநாயகம், சுரேஷ், சுப்பிரமணியன் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.